ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2361/46 - 2023 දෙසැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2023.12.08

2361/46 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MOR/LAN/01/FI/206.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: 4-3/4/2017/D/124.

இலங்கை இராணுவப் படையின் மின் இயந்திர பொறியியல் ஆரம்ப வேலைத்தளம் அமைந்துள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் லக்ஷபதிய (மொரட்டுவ மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2022.08.15 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 520210, தொகுதி 20 இல் 10 ஆம் தொகுதியின் தாள் இல. 2 இல் 3.3897 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய பின்வரும் காணித்துண்டுகள்:

1. **துண்டு இல.: 307**
காணியின் பெயர்: குட்டேரியாவலவத்தை, வெலோனாவத்தை; உரிமை கோருவோர்: இலங்கை போக்குவரத்துச் சபை; விஸ்தீரணம்: 3.3531 ஹெக்டயார்.

2. **துண்டு இல.: 308**
காணியின் பெயர்: குட்டேரியாவலவத்தை, வெலோனாவத்தை; உரிமை கோருவோர்: இலங்கை போக்குவரத்துச் சபை; விஸ்தீரணம்: 0.0366 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம்

27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மொரட்டுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இஷங்க டி. கே. உடவத்த,
பிரதேச செயலாளர்,
மொரட்டுவ.

பிரதேச செயலகம்,
மொரட்டுவ,
2023, திசெம்பர் 04.
EOG 12 - 0109